06.08.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண். 49/2021 ) திரு.வரதராஜபெருமாள்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1) வழக்கு தாக்கல் செய்த பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கும் சாட்சியம் அளிப்பதற்கு நிருபண வாக்குமூலம் தயார் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் கொடுத்தேனா என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை படித்துப்பார்த்தேனா படிக்கக்கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் படிக்கக்கேட்டு தெரிந்து கொண்டேன். எனது பதில் உறையில் மாரியப்பன் ஆசாரி அவரின் குமாரர்கள் செல்லையா, சுப்பையா கிடையாது என்று மறுத்து சொல்லவில்லை என்றால் அண்ணன் தம்பி என்று சொல்லுவார்கள் நான் பார்த்ததில்லை. மேற்படி சுப்பையாவின் மனைவி தான் திருமதி.காளியம்மாள் என்றால் சரிதான். தாவாச்சொத்தை பொறுத்து சுப்பையா ஆசாரி வாதிகள் மீது இந்த வழக்கிற்கு முன்பு வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் தாவாச்சொத்திற்கு 1950 ஆம் ஆண்டு கிரைய ஆவணம் வைத்துள்ளதாக வழக்கில் சொல்லி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணமும், எனது பெயரில் ஏற்பட்டுள்ள ஆவணம் வா.சா.ஆ.6 வேறு வேறு சொத்துக்களுக்கான ஆவணம் என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. எதிர்வழக்குரையில் மேற்கண்டவாறு சொல்லியுள்ளேனா அல்லது செல்லவில்லையா என்று தெரியுமா என்றால் அப்படிச்சொல்லவே இல்லை ஞாபகமில்லை. வழக்கு 2 வது தபசில் சொத்தில் நான் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வீட்டின் வாசல் பகுதி எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு பகுதியில் உள்ளது. வீட்டிற்கு முன்பு தென்வடலாக தெரு உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு வடக்கு பக்கம் ரோடு உள்ளது அந்த ரோடு வெயில்காந்தபுரம் செல்லும் ரோடு ஆகும் என்றால் சரிதான். வெயில்காந்தபுரம் ரோடு பலஆண்டுகளுக்கு முன்பு மண்ரோடாக இருந்தது என்றால் சரிதான். தற்போது தார் ரோடாக உள்ளது. தார்ரோடு பல ஆண்டுகளுக்கு முன்பு வண்டிப்பாதையாக இருந்தது என்றால் தெரியாது. எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடங்களுக்கு செல்வதற்கு எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் கிழமேலாக செல்ல முடியும் என்றால் சரிதான். மேற்கு பக்கம் உள்ளவர்கள் அந்த பாதை வழியாகத்தான் சென்றியிருக்கிறார்கள் என்றால் முன்பு சென்றார்கள். எனது மொத்த சொத்திற்கு மேற்கு பக்கம் யார் தற்போது இருந்து

வருகிறார்கள் என்றால் முத்தையா ரெட்டியாருக்கு சொந்தமானது. முத்தையா ரெட்டியார் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் அவருக்கு பூர்வீக இடம் என்று சொன்னார். முத்தையா ரெட்டியாரின் மகன் என்னவென்றால் திரு.ஆனந்த். முத்தையா ரெட்டியார் தந்தை பெயர் என்னவென்றால் பெருமாள் ரெட்டியார். எனது வீட்டிற்கு பின்புறம் இருக்கும் மூக்கையா என்பவர் யார் என்றால் மேற்கண்ட முத்தையா ரெட்டியாரின் உடன்பிறந்த அண்ணன் ஆவார். மூக்கையா ரெட்டியாரின் கிரையப்பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பொதுவாக கிரையம் எழுதிக்கொடுத்த பின்னர் கிரையம் கொடுத்தவரின் பெயரில் அல்லது அவரது மனைவி, மக்களின் பெயரில் பட்டா ஏற்பட்டால் அது தவறு என்றால் தெரியவில்லை. மேற்கண்டவாறு உள்ள நான்கு மால்களுக்கு உட்பட்டு வீடு, மின் இணைப்பு, வீட்டின் மேற்கூறை, அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வீடு, மின்இணைபு அந்த வீட்டின் மேற்கூறையை தான் இந்த வழக்கின் தாவாச்சொத்தாக விவரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பட்டா வழக்கு தாக்கல் செய்த 2021க்கு பின்னர் திரு.முத்துராஜ் என்பவரின் பெயரில் 2025ல் ஏற்பட்டது என்றால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.2,3 ஆவணங்கள் எந்த ஆண்டு ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் சொல்லத்தெரியாது மொத்தமாக இருந்தது தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.4 பட்டாவை சாட்சியிடம் காண்பித்து பச்சை மைக்கு கீழ் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பச்சை மையால் தேதி குறிப்பிடப்படவில்லை. திருமதி.காளியம்மாள் பெயருக்கு பட்டா வழங்கும் போது காளியம்மாள் வீடு இருந்து அங்கு குடியிருந்து வந்தாரா என்றால் குடியிருந்து வந்தார். பி.வா.சா.ஆ.4 பட்டாவின் பின் பகுதியில் நிலத்தின் படம் வரையப்பட்டு முழு விஸ்தீரணத்திலும் வீடு இருப்பதாக வருவாய் துறையினர் குறிப்பிடப்பட்டியிருப்பது என்றால் பாதி தான் வீடு இருந்தது முழு நிலத்திற்கும் வீடு இல்லை. முழுமையாக வீடு இருந்ததாக வருவாய் துறையினார் பட்டா வழங்கியிருந்தால் அது தவறு என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.4 பட்டா வழங்கிய போது யாரை விசாரணை செய்தார்கள் எப்படி வழங்கினார்கள் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னிட்டும் பி.வா.சா.ஆ.4 வழங்கியது சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் எனது அப்பா தான் வாங்கினார். நத்தத்தில் அரசாங்கத்தால் பட்டா வழங்கும் போதுஅந்த இடத்தில் ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்பதை தீர்மானிக்காமல் பட்டா வழங்கினால் அந்த பட்டா

செல்லத்தக்கதல்ல என்றாலும், அனுமதியின் பேரில் குடியிருந்துவரும் நபரின் பேரில் பட்டா வழங்கினாலும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 பட்டாவின் அடிப்படையில் திருமதி.காளியம்மாள் எனது தந்தைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது பெயருக்கு ஏற்பட்ட பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளவரின் பெயர் என்னவென்றால் எனது அப்பா யாரை கூட்டிச்சென்று பத்திரம் போட்டார் என்று எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் லெட்சுமண ஆசாரி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெற்ற கிரையப்பத்திரமும், அதற்கு முன்பு திருமதி.காளியம்மாள் பெற்ற பட்டாவும் சட்டப்படிசெல்லாது என்றால் சரியல்ல. குடிசை வீட்டிற்கு மின்சார இணைப்பு கொடுப்பதில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் 1950 ஆம்ஆண்டு கிரையப்பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளவரின் குமாரர் எங்களது பத்திரத்தில் சாட்சிகையொப்பம் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு மேற்கே குருசாமி ரெட்டியாரின் இடம் உள்ளது என்றால் தெரியாது. வாதியின் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு காலவரை சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு நாங்கள் எல்லோரும் சேர்ந்து எனது தம்பிக்கு பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் அதற்கு பின்னர் தான் வழக்கு விவரம் தெரியும்.

மறுவிசாரணை – இல்லை.
திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
06.08.2026.